செய்தி வெளியீடு எண்: 383 நாள் : 06.08.2015

# பத்திரிக்கைச் செய்தி

1. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளஅனைத்து வணிகர்களும் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் 4(9A) (b)–ன் கீழ் நிரந்தர கணக்கு எண் (PAN) வழங்க வேண்டும். மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் புள்ளி விவரங்களில் வணிகர்களின் நிரந்தர கணக்கு எண்களை சரி பார்த்தபோது பல வணிகர்கள் நிரந்தர கணக்கு எண்களை வழங்காதது மட்டுமின்றி போலியான எண்களை வழங்கிய விவரங்கள் தெரியவந்துள்ளது. சில இனங்களில், உரிமையாளர் அல்லது வணிகப் பெயர்களை சரி பார்த்த போது மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் புள்ளி விவரங்களில் உள்ள பெயர்களுடன் பொருந்தாமல் உள்ளது. பல இனங்களில், வணிகவரித்துறையில் உள்ள புள்ளி விவரங்களிலும், மத்திய நேரடிவரிகள் வாரியத்தின் புள்ளி விவரங்களிலும் வணிகர்களால் வழங்கப்பட்டுள்ள நிரந்தர கணக்கு எண் பொருந்தாமல் உள்ளது. அத்தகைய வணிகர்களின் விவரங்கள் வணிகவரித்துறையின் வலைத்தளத்தில் (www.tnvat.gov.in) பட்டியலிடப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட பட்டியலிலுள்ள வணிகர்கள் உரிய விவரங்களுடன் தங்களின் நிரந்தர கணக்கு எண் நகலினை (PAN card xerox) சம்பந்தப்பட்ட வணிகவரித்துறை உதவிஆணையர் அலுவலகத்தில் ஆகஸ்ட் 31–ஆம் தேதிக்குள் வழங்கிட வேண்டும். தவறினால் வணிகவரித்துறையால் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் பதிவினை ரத்து செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

க. ராஜாராமன், இ.ஆ.ப.
முதன்மைச் செயலர்/ஆணையர்
வணிகவரித்துறை

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9